# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. No.249/2020

Deposition of witness for the Plaintiff/PW2
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 04-11-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : K.Raja | Village | : |
| Father's Name | : Kuppusamy | Taluk | : |
| Age | : | Calling | : |

<u>பிரமாண பத்திரத்தின் தொடர்ச்சியாக முதல் விசாரணை</u>

நான் சென்னை கே.கே நகரில் வசித்து வருகிறேன். எனது ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்கிறேன். (அது ம.த,சா.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது). நான் சொல்லக் கூடிய சங்கதிகளை சத்திய பிரமாணம் செய்து எழுத்து பூர்வமாக தாக்கல் செய்கிறேன். அதை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

<u>இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் நின்று கொண்டிருந்த டீ கடைக்கும் விபத்து நடைப்பெற்ற இடத்திற்கும் இடையேயான தொலைவு சுமார் 15 அடி இருக்கும். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கும் டிஎன் 10 BC 6063 வாகனம் ராயல் என்பீல்டு மோட்டார் சைக்கில். எதிரே வந்த வாகனம் எமகா மோட்டார் சைக்கில். போலீசார் என்னை விசாரித்தார்கள். பி.த.சா.11 இறுதி அறிக்கைனயில் சாட்சிகளின் பட்டியலில் எனது பெயர் இடம்பெறவில்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. இறந்து போன நபர் எனது நண்பர் என்றும் ஆகையினால் அவரது குடும்பத்திற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**(**மூன்றாம் எதிர்மனுதாரர் தரப்பில் தரப்பினரோ அல்லது அவரது வழக்கறிஞரோ ஆஜராகாததினால் அவரது தரப்பில் சாட்சியின் சாட்சியம் முடிக்கப்படுகிறது**.)**